மாவட்டம் பரலிக் கோட்டையில், 1889ல் இ...

இருக்காவ வே...''



# வேளாண் அறிவியல் நிலையத்தில் மரம் வளர்ப்பு தேசிய பிரசாரம்




புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் இக்கோ நிறுவனம் இணைந்து நடத்திய ஊட்டச்சத்து மற்றும் மரம் வளர்ப்பு பற்றிய தேசிய அளவிலான பிரசார நிகழ்ச்சியில் அமைச்சர் சாய் சரவணன்குமாரிடம், விவசாயிகள் விதைகள் மற்றும் பழ கன்றுகளை வழங்கினர்.

**புதுச்சேரி, செப். 18–**

காமராசர் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் இக்கோ நிறுவனம் இணைந்து ஊட்டச்சத்து மற்றும் மரம் வளர்ப்பு பற்றிய தேசிய அளவிலான பிரசாரம் நடந்தது.

புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, அமைச்சர் சாய்சரவணன்குமார் தலைமை தாங்கினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜாகிர்உசேன் வரவேற்றார். இயக்குநர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். ஊட்டச்சத்து தானியங்கள் பற்றியும், மனித ஆரோக்கியத்தில் அதன் பங்கு குறித்து ஜிப்மர், உணவியல் நிபுணர் மாதவி கூறினார்.

முன்னதாக, நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள், காய்கறி விதை மற்றும் பழக்கன்றுகளை, அமைச்சர் சாய் சரவணன் குமாரிடம் வழங்கினர்.

நிலையான விவசாயம், கிராமப்புற வாழ்வாதாரத்தில் தோட்டத்தின் பங்கு பற்றி, உழவியல் நிபுணர் ரவி கூறினார்.

மத்திய அரசின் வேளாண் திட்டங்கள், அதை பெறும் வழிமுறைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மரக்கன்று நடும் நிகழ்ச்சியை அமைச்சர் துவக்கி வைத்தார். வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள், ஊழியர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். தொழில் நுட்ப வல்லுனர் பொம்மி நன்றி கூறினார்.